2019 பிப்ரவரி 12]

60—

சர்வோதய சங்கத்தைப் புதுப்பித்தல்

***7141—திருமதி பொன். சரஸ்வதி:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டில் உள்ள காந்தி ஆசிரம சர்வோதய சங்கத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையினை இப்பேரவைக்கு சமர்ப்பிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோட்டில் உள்ள காந்தி ஆசிரம சர்வோதய சங்கத்தைப் புதுப்பிக்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்ப்பரிக்கும் கடல் அலையும் அடிபணிந்து தலை வணங்கும் மனிதர்குல மாணிக்கம், சீர்மிகு சிந்தனைகளின் சுரங்கம், தனி மனித இராணுவமாய் தலை நிமிர்ந்து நிற்கும் ஆளுமைத் திறனாய் அவதரித்த வடிவம், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் திசை நோக்கி வணங்குகிறேன்.*

கொங்கு கண்ட தங்கம், குடிமராமத்து நாயகன், விவசாயிகளின் காவலர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, பாண்டி நாட்டுத் தங்கம், எளிமையின் இலக்கணம், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி வினாவை எழுப்புகின்றேன்.

[2019 பிப்ரவரி 12

1925 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி மூதறிஞர் இராஜாஜியால், அன்றைய சேலம் மாவட்டம், இன்றைய நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு தொகுதிக்குட்பட்ட புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் தொடங்கப்பட்டது. இங்கு, 116 நிரந்தர ஊழியர்களுக்கும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைத்தொழில் கலைஞர்களுக்கும் வாய்ப்பளித்து பல்வேறு காதி கிராமப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 1925 மற்றும் 1934 ஆம் ஆண்டு என இருமுறை மகாத்மா காந்தியடிகள் இந்த ஆசிரமத்திற்கு வந்து தங்கிச் சென்றுள்ளார். அதுபோல் 1936 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவும், 1953 ஆம் ஆண்டு லால் பகதூர் சாஸ்திரியும், 1975 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் காமராஜரும் ஆசிரமத்திற்கு வந்து பணிகளைப் பாராட்டிச் சென்றுள்ளனர்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், அன்று 4 ஏக்கரில் துவங்கப்பட்டு, இன்று 24 ஏக்கராக விரிந்திருக்கும் நிலையில் இதனைப் பராமரிக்கவும், புதுப்பிக்கவும் போதிய நிதி இல்லாததால், மாண்புமிகு அம்மாவின் அரசு பழமை வாய்ந்த திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 66 சர்வோதய சங்கங்கள், மத்திய அரசின் கதர் ஆணையக் குழுவின் மாநில அலுவலகங்களிலிருந்து வழங்கப்படும் சான்றிதழ்களின்படி செயல்படுபவை ஆகும். திருச்செங்கோட்டில் செயல்பட்டுவரும் காந்தி ஆசிரமம் சர்வோதய சங்கம் ஆகும். அனைத்து சர்வோதய சங்கங்களுக்கும் ஆண்டுதோறும் உற்பத்திக்கான 20 சதவிகித வணிக அபிவிருத்தி நிதியுதவித் தொகை மாநில அரசால் வழங்கப்படுகிறது. திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தின் செயலர்*

2019 பிப்ரவரி 12]

அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சிறப்பு இனமாகக் கருதி, தமிழக அரசால் ஒரு முறை மானியமாக ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், சர்வோதய சங்கங்களுக்கு 2014–2015 ஆம் ஆண்டிற்கான வணிக அபிவிருத்தி நிதியில் 75 சதவிகித முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இச்சங்கங்களில் தணிக்கை முடிவுற்றுள்ளதால், எஞ்சிய 25 சதவிகித நிதியை வழங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேலும், 2015–2016 ஆம் ஆண்டிற்கான வணிக அபிவிருத்தி நிதியில் 75 சதவிகித முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. தணிக்கை முடிவுற்ற பின்னர் எஞ்சிய 25 சதவிகித நிதி வழங்கப்படும். மேலும், 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய வணிக அபிவிருத்தி நிதியில் 75 சதவிகித முன்பணம் வழங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]